DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 395/2022

Prosecution Witness 4

| | | | |
|---|---|---|---|
| Name | : ஷர்மா | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.தங்கவேல் | Calling | : நடத்துனர் |
| Village | : குஞ்சுபாளையம் | Religion | : |
| Taluk | : | Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of March 2026.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை:-

1. நான் தற்போது குஞ்சுபாளையத்தில் குடியிருக்கிறேன். நடத்துனராக வேலை செய்கிறேன். கடந்த 5, 6 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் இரவு சுமார் 07.15 மணியளவில் கோவில்பாளையத்தில் நடத்துனர் என்ற முறையில் பின் இருக்கையில் அமர்ந்துள்ள பயணியர்களுக்கு பயண சீட்டு கொடுத்துக்கொண்டிருந்தபோது திடீரென்று விபத்து ஏற்பட்ட சத்தம் கேட்டது. இறங்கி பார்க்கச் சென்றேன். அப்போது மக்கள் கூட்டமாக இருந்தார்கள் அதனால் என்னால் எதுவும் பார்க்க இயலவில்லை. பேருந்தில் ஏறி வந்துவிட்டேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரனை செய்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து அனுமதி அளிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :

2. கடந்த 30.12.2019 அன்று இரவு சுமார் 08.00 மணியளவில் சேரன்நகர், ஆதித்யா பேக்கரி அருகே கோயமுத்தூர் - பொள்ளாச்சி மார்க்கம் சென்ற தனியார் பேருந்தின் பதிவு எண் TN 37 BZ 6730 என்ற பேருந்தில் நடத்துனராக பயணம் செய்தபோது அசா 1 தன்னுடைய மனைவியை இருச்ககர வாகனத்தில் வைத்து தெற்கில் இருந்து வடக்கி நோக்கி சென்றபோது அதற்கு பின்னால் எந்த எங்களுடைய பேருந்தை எதிரி அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று இருசக்கர வாகனத்தின் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றும் அந்த விபத்தில்

அசா1 ன் மனைவி இறந்துவிட்டார் என்றும் அசா 1க்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> : இல்லை

<u>மறுவிசாரணை</u> - இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.